நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 01 திங்கட்கிழமை (16-11-1992) UTHAYAN — A Lively National Tamil Daily மதிர் 354

# போர் நிறுத்தத்தை ஏற்படுத்தும் குவாக்கர் குழுவின் முயற்சி தோல்வி

## எனினும் பேச்சு நடப்பதற்கு இன்னும் வாய்ப்பு உள்ளதாம்

கொழும்பு, நவம்பர் 16

— விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காப் படைகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு "குவாக்கர்" சமாதானக் குழுவினர் மேற்கொண்ட முயற்சிகள் தடைப்பட்டன. எனினும் பேச்சு நடத்துவதற்கு இன்னும் வாய்ப்பு உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு ஞாயிறு வாரப் பத்திரிகைகள் இத் தகவல்களை வெளியிட்டன.

"குவாக்கர்" சர்வதேச சமாதானக் குழுவின் மூன்று பிரதிநிதிகள் கடந்த 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களைச் சந்தித்து விரிவாகப் பேச்சு நடத்திவிட்டுக் கொழும்பு திரும்பினர் என்பது தெரிந்ததே.

முன்பு சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த பின்னர் சிறித காலம் ஒதுங்கியிருந்த இக் குழுவினரை ஸ்ரீலங்கா அரசின் மூத்த தலைவர்களே மீண்டும் சமரச முயற்சியில் ஈடுபடும்படி கோரினர் என்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## எழுச்சிவார நிகழ்வுகளில் ஆர்வத்துடன் பொதுமக்கள்

யாழ்ப்பாணம், நவ. 16

மாவீரர் எழுச்சி வாரத்தின் முதல் நாளான நேற்று யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிரமதானங்கள், கருத்தரங்குகள், மரம் நடுதல் ஆகிய நிகழ்ச்சிகள் பரவலாகவும், திட்டமிட்டவாறும் நடைபெற்றன. மக்கள் இவற்றில் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் கலந்து கொண்டனர்.

இடம்பெயர்ந்தோர் முகாம்கள், வைத்திய சாலைகள், வீதிகள், பொது இடங்கள், பாடசாலைச் சுற்றுப் புறங்கள் என்பனவற்றை பொதுமக்கள் செப்பனிட்டும், சிரமைத்தும், துப்புரவு செய்தும் சிரமதானங்களில் ஈடுபட்டனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஜேர்மனியில் தங்கியுள்ள அகதிகளுக்கு உதவி குறைப்பு

பொன், நவ. 16

ஜேர்மனியில் தங்கியுள்ள வெளிநாட்டு அகதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் அகதி நிவாரண உதவிகளை ஜேர்மன் அரசு குறைத்திருக்கிறது.

நிவாரண உதவிகளை குறைப்பதற்கு வழி செய்யும் சட்ட விதிகள் ஜேர்மன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அரசியல் தஞ்சம் கோரியுள்ள வெளிநாட்டு அகதிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்படும் வரை வழங்கப்படும் உதவித் தொகையே இவ்வாறு குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## மனித சங்கிலி போராட்டம் நேற்று பூர்த்தியானது

### பெரும் திரளானோர் பங்குபற்றினர்

கொழும்பு, நவ. 16

எதிர்க்கட்சி கூட்டு முன்னணியின் மனித சங்கிலிப் போராட்டம் நேற்று மூன்றாம் நாளுடன் பூர்த்தியடைந்தது.

நேற்று இறுதி நாளன்று ஆயிரக்கணக்கானோர் இப் போராட்டத்தில் பங்குபற்றினர் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில்—

இப்போராட்டத்தை ஜே. வி. பியின் தலைவர் றோஹண விஜேவீரவின் மூன்றாவது நினைவு தினத்தன்று எதிரணிகள் ஆரம்பித்ததாகத் தெரிவிக்கும் சுவரொட்டிகள் கொழும்பு நகர் எங்கும் ஒட்டப்பட்டிருக்கின்றன.

எதிர்க்கட்சிகளை ஜே வி.

4 ஆம் பக்கம் பார்க்க]

## ஷெல் தாக்குதல்

சுழிபுரம், நவ 16

நேற்று முன்தினம் இரவு 11-15 மணிக்கு காரைநகரிலுள்ள படையினர் பொன்னாலை மூளாய் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இதேவேளை—

பலாலி இராணுவ முகாமில் இருந்தும் நேற்று அதிகாலை 1 மணியளவில் வலிகாமம் மேற்குப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

சுழிபுரம், வடலியடைப்பு, சில்லாலைப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

(ஓ-15-28)

## கிளாலியில் ஹெலி சூடு

தென்மராட்சி, நவ. 16

கிளாலிப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5 மணியளவில் ஹெலி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தது.

பயணிகள் பதற்றமடைந்து நாலாபுறமும் சிதறி ஓடினர்.

(ஓ-117)

**தமிழீழ மீட்பு நிதி மீளப் பெறுவோர் கடன் பத்திரங்களின் விவரம் 3 ஆம் பக்கத்தில்**

## அளவெட்டி வடக்கில் சூடு! பொதுமக்கள் இருவர் காயம்

அளவெட்டி வடக்கு பொன்னிப்புலம் பகுதியில் நேற்றுப் பகல் 1.30 மணியளவில் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்தனர்.

இடம்பெயர்ந்த சிலர் தமது வீடுகளில் இருந்து பொருள்களை எடுத்து வரச் சென்றிருந்த சமயமே படையினர் திடீரென கண்மூடித்தனமாக துப்பாக்கிப்பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர்.

அப்பொழுது அவர்கள் உடைமைகளை அப்படியே கைவிட்டுவிட்டு, கையில் கிடைத்த சிலவற்றுடன் சிதறி ஓடி தப்பி வந்துவிட்டனர்.

பொன்னிப்புலம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது சங்கானையில் வசித்து வரும் வைரவன் நாகலிங்கம் (வயது 72) என்பவரும், பொருள்களை ஏற்றிவர "லான் மாஸ்டர்" கொண்டு சென்றிருந்த அளவெட்டி தெற்கைச் சேர்ந்த கந்தையா சந்திரசேகரம் (வயது 34) என்பவரும் இச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஓ-15-18)

### மழை, சூறாவளி பாதிப்பு:

## தமிழகத்தில் பலியானோர் எண்ணிக்கை 135 ஆக உயர்வு

சென்னை, நவ. 16

சூறாவளி மற்றும் கடும் மழை காரணமாக தமிழகத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 135 என்று இந்திய வானொலி நேற்று மாலை தெரிவித்தது.

திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டத்தில் மட்டும் 54 பேர் உயிரிழந்தனர் என்றும்—

இம்மாவட்டத்தில் 6 வீடுகள் இடிந்து விழுந்ததில் 37 பேர் இறந்தனர் என்றும்—

மதுரை மாவட்டத்தில் மழை வெள்ளம் காரணமாக 37 பேர் உயிரிழந்தனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிங்கபுரம் என்னும் இடத்தில் தாமரபரணி ஆறு உடைப்பெடுத்ததால் ஏற்பட்ட வெள்ளத்தில் 37 பேர் அடித்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மணி முத்தாறு நீர்த் தேக்கம் நேற்றுக்காலை திறந்த

[3 ஆம் பக்கம் பார்க்க]

### சூறாவளியில் சிக்கிய

## 5 இந்திய மீனவர்கள் திருமலையில் ஒதுங்கினர்

கொழும்பு, நவ. 16

சூறாவளியில் சிக்குண்ட இந்திய மீனவர்களில் ஐவர் திருகோணமலைப் பகுதியில் கரை ஒதுங்கியுள்ளனர்.

இவர்கள் ஐவரும் ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

இதேசமயம் சூறாவளி வீசிய போது இலங்கையின் கிழக்குக் கடல் பிராந்தியத்தில் மீன்பிடிக்கச் சென்ற சுமார் பத்து அல்லது பன்னிரண்டு மீனவர்களின் கதி என்னவென்று தெரியவில்லை என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

மட்டக்களப்பு மாவட்டத்தில் சூறாவளியால் எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. ஆனால் இறந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

(ஓ-3)

## சீன யுத்த விமானங்களை இலங்கை இனி வாங்காது!

கொழும்பு, நவ 16

சீனாவிடம் இருந்து மேலும் போர் விமானங்களை கொள்வனவு செய்ய ஸ்ரீலங்கா அரசு விரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட போர் விமானங்கள் பல பழுதடைந்துள்ளதாலும், இயந்திரக் கோளாறு காரணமாக இவை சரியாக இயங்கவில்லை என்று கூறப்படுவதாலுமே சீனாவிடமிருந்து மேலும் போர் விமானங்களை வாங்குவதில்லை என்று ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## நேற்றும் ஒரு குழந்தை பலி

யாழ்ப்பாணம், நவ 16

வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் குழந்தைகளில் நேற்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆர்ஜென்ரீனாவிலிருந்து யுத்த விமானங்கள்! பிரான்ஸி'லிருந்து ஹெலி, பீரங்கிப் படகுகள்!!

### கொள்வனவு செய்ய ஸ்ரீலங்கா அரசு முடிவு

மணிலா, நவ. 16

ஆர்ஜென்ரீனாவிடமிருந்து போர் விமானங்கள், போர் ஆயுதங்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்யவும் —

பிரான்ஸிடமிருந்து போர் ஹெலிக்கொப்டர்களை வாங்கவும், அதிவேகக் கடற்படைக் கப்பல்களுக்கான தொழில் நுட்பத்தைப் பெறவும் ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருக்கிறது.

ஏஜென்ஸிச் செய்திகள் இத் தகவலை வெளியிட்டன.

ஆர்ஜென்ரீனா நாட்டிடம் இருந்து "புக்காரா" ரக போர் விமானங்களை வாங்குவது பற்றி முடிவு செய்ய ஆர்ஜென்ரீனா நாட்டைச் சேர்ந்த சில நிறுவனங்களின் பிரதிநிதிகள் கொழும்புக்கு விஜயம் செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆறு போர் விமானங்களை சுமார் 75 கோடி ரூபா செலவில் ஆர்ஜென்ரீனா நாட்டிடம் இருந்து வாங்க

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

மீனாட்சி சுந்தரம், ஸ்ரீராமகிருஷ்ணரின் பிரார்த்தனை, நவராத்திரி, அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர், சான்றோர் யார்? ஆகிய இன்னும் பல போதனைக்குரிய அம்சங்களை உள்ளடக்கிய "ஸ்ரீராமகிருஷ்ணர் விஜயம்" விற்பனையாகிக்கொண்டிருக்கிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [இ-3778]

## வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீன்பார்வையுடன் கூடிய சைவநெறி, தத்தமிட்ட ஒக்கான வினா-விடை ஆண்டு 11. ஆக்கம்: க. சந்திரசேகரம். வெளியீடு: சோதி வெளியீட்டு காரியம்; எல்லாப்புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [இ-3668]

## மணமக்கள் தேவையா?

உங்கள் மணப்பிரச்சினையை அலைச்சல் இன்றி இலேசாகத் தீர்க்கலாம் சந்திப்பு: சனி காலை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [23158]

## A/L இரசாயனம்

மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சண்டிலிப்பாய் சுற்றாடல் பகுதியில் தனிப்பட்ட முறையில் அல்லது சிறு குழுக்களாக 93, 94ஆம் ஆண்டு மாணவர்களுக்கு அனுபவம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியரால் நேரில் வந்து கற்பிக்கப்படும். விபரங்களுக்கு 05 மே/பா உதயன் சேவை நிலையம், இல 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (5427)

## சித்திரம்

1992 க. பொ. த. (சா/த) தேர்வுக்குத் தோற்றும் மாணவர் திறமைச் சித்தி பெற்றுக்கொள்ள "சித்திரம் ஆண்டு 11" புதிய பாடத் திட்டத்திற்கமைய உருவாக்கியவர்: உங்கள் அபிமான ஆசிரியர் யசோதரன். [23273]

## குடும்ப அட்டைகள் மீளாய்வு

அராலி, நவ. 16

வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் உட்பட சகலரதும் குடும்பப் பதிவு அட்டைகளை மீளாய்வு செய்யும் வேலைகள் இம்மாதம் 30ஆம் திகதியுடன் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

இதுவரை தமது குடும்பப் பதிவு அட்டைகளை மீளாய்வு செய்து கொள்ளாதவர்கள் தாங்கள் தங்கியுள்ள பகுதி கிராம சேவையாளரிடம் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து மீளாய்வு செய்து கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். (த-12)

## உர விநியோகம்

உடுவில், நவ. 16

விவசாயிகளுக்குத் தேவையான உரவகைகளை விவசாயத் திணைக்களம் தற்போது சமநல சேவை நிலையங்களினூடாக விநியோகித்து வருகின்றது.

அமோனியா, பொட்டாஸ் போன்ற உரவகைகள் மலிவு விலையில் உடுவில் கமநல சேவை நிலையத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (த-152)

## தமிழகத்தில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடப்பட்டதைத் தொடர்ந்து தாமரபரணி ஆறு உடைப்பெடுத்தது. இதன் காரணமாக மூன்று கிராமங்கள் நீரில் மூழ்கின. பெரும்பாலான உயிரிழப்புகள் வீடுகள் இடிந்து விழுந்ததனால் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

வெள்ளம் காரணமாக கேரள மாநிலத்தில் இதுவரை ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை 23 என்று அறிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 29 | 16 |
| — | — |
| 05 | 11 |
| — | — |
| 1908 | 1991 |

அமரர்

## முருகேசு நமசிவாயம்

(முன்னாள் அதிபர்)

ஆலம் விழுதுகளாய் இத்தரணியில் நாம் சிறப்புடன் வாழ வழி சமைத்த ஐயா காலத்தால் உம்பணி முடித்துச் சென்ற உங்களை ஞாலம் உள்ளவரை நாம் மறவோம்;

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

மல்லாகம்,
உடுவில். (23261)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 10 | 17 |
| — | — |
| 06 | 10 |
| — | — |
| 1934 | 1992 |

## அமரர் யோகம்மா விஜயரத்தினம்

திதி: 16 — 11 — 1992

அன்பின் திருவுருவாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எமக்கு சாகவே வாழ்ந்து, இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! எங்கள் சிறப்பைக் காணாது எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்த அம்மா! எத்தனை மாதங்கள் மறைந்தாலும், உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றும் அகலாது உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

உங்கள் நினைவால் வாடும்,
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்.

சன்னதி வீதி,
மத்தமேனி, அச்சுவேலி. (5571)

---

# முதலாம் வருட ஞாபகார்த்தம்



| இம்மையில்: | மறுமையில்: |
|---|---|
| 17 | 16 |
| — | — |
| 05 | 11 |
| — | — |
| 1905 | 1991 |

## Rev. N. கதிரவேலு

பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்;

2 கொரி. 5:1

அன்புடன் நினைவு கூரும்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

52/2, கண்டி வீதி,
கண்டிக்குளி. (23281)

---

# அதிபர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 16

மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் சம்பந்தமாக பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடல் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கலந்துரையாடல்கள் நடைபெறும் இடங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

★ யாழ். கல்விக்கோட்டம்: இன்று திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு — யாழ். இந்து குமாரசாமி மண்டபம்.

★ பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம்: இன்று திங்கள் பிற்பகல் 2 மணிக்கு— மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபம்.

★ வேலணைக் கல்விக் கோட்டம்: நாளை செவ்வாய் பிற்பகல் 1 மணிக்கு — ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலையில் (சென் ஜோன் அக்கடமி).

★ வடமராட்சிக் கல்விக் கோட்டம்: நாளை செவ்வாய் பிற்பகல் 2-30 மணிக்கு — வேலாயுதம் ம. வி. மண்டபம்.

(4ஆம் பக்கம் பார்க்க)

---

## அரசினர் பொது (போதனா) வைத்தியசாலை

யாழ்ப்பாணம்

# கேள்வி விளம்பரம்

## சலவை ஒப்பந்தம் - 1993

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையின் அழுக்குத் துணிகளை 01-01-1993 தொடக்கம் 31-12-1993 வரை சலவை செய்வதற்காக கேள்விப்பத்திரங்கள் 27-11-1992 காலை 10-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் உரிய பத்திரங்களில் இரு பிரதிகளாக நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். எனது பெயருக்கு ரூபா 150/-ஐ வைத்தியசாலைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்;

கேள்விப்பத்திரங்கள் நேரில் ஒப்படைக்கப்பட்டால் ஒப்புக் கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு வழங்கப்படும். ஒப்பந்தகாரர் விரும்பினால் கேள்விப்பத்திரங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம்.

கேள்விப்பத்திரங்களை அவைகள் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவுத்திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்; கேள்விகள் என்னால் வழங்கப்படும் அதற்குரிய பத்திரங்களில் இல்லாவிடில் நிராகரிக்கப்படும். முடிவு திகதியன்று காலை 10-00 மணிக்குப் பின்வரும் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர் பிணைப் பணமாக ரூபா 1 500/-ஐ செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும். ஏற்றுக் கொள்ளப்படாத கேள்விப்பத்திரங்களின் மேல் செலுத்தப்பட்ட பணம் ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 27-11-1992 காலை 10மணிக்கு எனது காரியாலயத்தில் திறக்கப்படும் போது கேள்விதாரர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ பிரசன்னமாயிருக்க வேண்டும்;

மேலதிக விபரங்களை இவ்வைத்தியசாலையின் கணக்காளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்;

வைத்திய கலாநிதி
(செல்வி) ந. கனகரத்தினம்,
பணிப்பாளர்,
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம், / 1992-11. (இ-3854)

---

## இயேசுவோடு இணைந்த 7ஆம் நாள்

# நினைவஞ்சலி

(16 — 11 — 1992)



அன்னையின் மடியில்:

23 - 12 - 1922

இயேசுவின் கைகளில்:

10 - 11 - 1992

## தேவசகாயம் தோமாஸ்

"உயிருள்ளவரை எம்மை நேசித்தீர்!
உதிர்ந்த பின் உம்மை மறவோம்."

ஐயா!

நங்கள் நிழலில் வாழ்ந்த எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு சிலுவை சுமந்த யேசுவின் பாதத்தை நாடியே நீங்கள் விரைந்து சென்றீரோ நாமெல்லாம் நாம் கலங்குகின்றோம்.

தவிர்க்க முடியாத காரணத்தால் மரணச் சடங்குகள் அறிவிக்க முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்;

பிரிவால் துயருறும்:

மனைவி மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

12/3, அருளம்பலம் ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம். (23283)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தர்மமும் தகுதியும்

பொதுசன உதவிப்பணம் வழங்குவதற்கென யாழ்ப்பாண மாவட்டத்துக்குக் கடந்த இரண்டு வருடங்களாகப் போதிய நிதி ஒதுக்கப்படவில்லை. 1990 ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட அதே அளவு தொகையே பிந்திய இரண்டு வருடங்களுக்கும் அனுப்பப்பட்டது.

அதனால் 1991, 92 ஆம் ஆண்டுகளில் பொதுசன உதவிப் பணம் பெறுவதற்குத் தகுதியான—பண வசதி இல்லாத ஆயிரக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். கணவர்களை இழந்த விதவைகள், பராமரிப்பதற்கு எவரது உதவியும் இல்லாத ஏழை முதியவர்கள், காசநோய், தொழுநோய், புற்றுநோய் என்பவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகிய பல தரப்பட்ட ஏதிலிகள் இங்கு கஷ்டமுறுகின்றனர்.

எல்லா விடயங்களிலும் தமிழ் மக்களைப் புறக்கணித்து வரும் வழக்கத்தை அரசாங்கம் தர்மம் செய்வதிலும் நிலைநாட்டுகிறது!

தர்மம் செய்வதாகப் புறப்பட்ட அரசு, தகுதியுள்ள சகலருக்கும் தர்மப் பணத்தை - பொதுசன உதவிப் பணத்தை— வழங்கியே ஆகவேண்டும். ஆனால் தமிழர்களை அரசாங்கம் சமமாகக் கருதினால் அல்லவோ தர்மத்தையும் தளம்பல் இன்றிச் செய்யும்!

அபிவிருத்தித் திட்டங்களாயினும் சரி சமூக நலத் திட்டங்களாயினும் சரி, அத்தியாவசிய சேவைத் திட்டங்களாயினும் சரிதான், தமிழ்ப் பகுதிகளுக்கு அவை சென்றடையக் கூடாது என்பதில் அரசாங்கமும், அதன் அதிகாரிகளும் எப்போதும் கண்ணும் கருத்துமாக உள்ளனர்!

சமூகத்தின் அடி மட்டத்தில் உள்ளவர்களுக்கு, பொருளாதார ரீதியாகப் பின்தங்கி உள்ளவர்களுக்கு, வறுமைக்கோட்டின் கீழ் இருந்து வாழ்க்கையை நடத்த முடியாமற் கஷ்டப்படுபவர்களுக்கு உதவும் பெரும் சமூக நலத் திட்டமாக தென்னிலங்கையில் ஜனசக்தித் திட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது.

வறுமை ஒழிப்புக்கான முதன்மைத் திட்டமாகக் காட்டப்பட்டு அதனை ''சார்க்'' நாடுகளின் பொதுத் திட்டமாக்கி இப்பிராந்தியத்தின் வறுமையை ஒழித்துக்கட்ட இயலும் என்று ஜனாதிபதி வெளுத்து வாங்குகிறார்! ஆனால் வடக்கில்....?

யாழ். மாவட்டத்தில் ஜனசக்தி திட்டத்தைப் பரீட்சார்த்தமாக அமுல் செய்ய மூன்று உதவி அரச அதிபர் பிரிவுகள் (யாழ்ப்பாணம், வேலணை, மருதங்கேணி) 1990ல் தெரிவு செய்யப்பட்டன. யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பின்னையார் சுழி போட்டதுடன் திட்டம் தீர்ந்து போயிற்று. கதை முடிந்துவிட்டது!

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் இதே கதைதான்! -பிரேமதாசாவின் வறுமை ஒழிப்புப் பிரமாதம் — ''ஸ்பெஷல்'' — தெற்கில் வாக்குச் சேகரிக்கத்தான் என்றாகிவிட்டது!

இவ்வாறாகத் தமிழர்கள் எல்லா வகைகளாலும் புறக்கணிக்கப்படுவதே பிரேமதாசாவின் தர்ம ஆட்சி!

வடக்கு - கிழக்கு யுத்தம் நடைபெறுவதால் அங்கு அபிவிருத்தித் திட்டம் எதனையும் ஆரம்பிக்க முடியாது என்று நொண்டிச் சாட்டுச் சொல்லும் அரசினரும், அதிகாரிகளும் யுத்தத்தினால் பாதிக்கப்படும் தமிழர்களுக்கு உதவுவதற்கு கூடப் பின்னடிக்கிறார்கள். தமிழர்கள் உரிமைப் போராட்டம் நடத்துவதற்காக அரசாங்கம் வழங்கும் தண்டனைகள் இவை!

ஆனால் அதனை அரசாங்கம் வெளிப்படையாகக் கூறுவதில்லை. தமிழர்களை இவ்வாறு தண்டித்தும், புறக்கணித்தும் அரசாட்சித் தர்மத்துக்கு விரோதமாக நடந்துகொள்ளும் அரசு, தமிழர்கள் தனது பிரஜைகள் என்று உரிமை கொண்டாடவும் வேறு முயல்கிறது! இது வெளிஉலகத்தை ஏமாற்றும் பெரும் தந்திரமே!

தமிழர்கள் உரிமைப் போராட்டம் நடத்துவதாலேயே அவர்களுக்குரிய நலன்கள், சேவைகளைச் செய்யாமல் தண்டிக்கிறோம் என்று அரசாங்கம் வெளிப்படையாகக் கூறவேண்டும். அதுவே நேர்மை! தர்மம்.

## கிளிநொச்சி வைத்தியசாலையில்

# போலியோ, ஏற்பு நோய் தடுப்பு மருந்து தட்டுப்பாடு

முறிகண்டி, நவ. 16

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இளம்பிள்ளைவாதம் (போலியோ) மற்றும் ஏற்பு நோய்களுக்கான தடுப்பு மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5 மாதங்களாக இந்நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மருந்துப் பொருள்களைத் தருவிக்க சுகாதார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளப்பட்ட போதிலும் பலன் எதுவும் கிடைக்கவில்லை என்றும்—

செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழுவின் ஊடாக இம்மருந்து வகைகளைத் தருவிக்க எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிந்ததாகவும் அறிய வந்தது.

இதேவேளை—

விசர்நாய்க் கடிக்கான ஏ. ஆர். வி. தடுப்பூசி மருந்து கிளிநொச்சி மருத்துவமனையில் போதியளவு கையிருப்பில் உள்ளதாக மாவட்ட வைத்திய இணைப்பதிகாரி டாக்டர் எம். சந்திரசேகரம் தெரிவித்தார். (த-97)

## தங்க இறக்குமதியில் அரசாங்கம் தாராளம்!

வர்த்தக வங்கிகளும் தங்கத்தை இறக்குமதி செய்ய அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது.

இதே வேளை—

ஆறு மாதங்களுக்கு மேல் வெளிநாட்டில் தங்கியிருந்து நாடு திரும்பும் இலங்கையர் ஒருவர் ஐயாயிரம் டொலர் வரை பெறுமதியான தங்கத்தை வாங்குவதற்கும் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. (த-எ)

## அகதிகளாக 50,000 பேர்

கடந்த சில தினங்களாக நாடு முழுவதும் பெய்த கடும் மழையினாலும் சில இடங்களில் வீசிய சூறாவளி காரணமாகவும் ஆறு மாகாணங்களில் சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சமூகசேவைத் திணைக்களம் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது. (த-எ)

## இனப்பிரச்சினை தீர்வுக்கு

# தெரிவுக்குழு செயற்பாடே இறுதிச் சந்தர்ப்பமாம்

## கொழும்பு பல்கலை. உபவேந்தர்

கொழும்பு, நவ. 16

நாட்டில் இரத்த ஆறு ஓடுவதை நிறுத்தி அனைத்து சமூகங்களும் சுயமரியாதையுடனும் நீதிபெற்றும் வாழக்கூடியதான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்குக் கிடைத்த இறுதிச் சந்தர்ப்பமாக மங்களமுனசிங்க தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடு அமைகின்றது.

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கொழும்பு மஹாநாம வித்தியாலய பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்ற மனப்போக்கு முன்னர் என்றுமில்லாதவாறு இப்போது இலங்கை மக்களின் அனைத்துப் பிரிவினர்கள் மத்தியிலும் அதிகரித்துக் காணப்படுகின்றது என்றும் அவர் சொன்னார். (த-எ)

## ஜனாதிபதித் தேர்தல்:

# லலித்தை வேட்பாளராக நிறுத்த சந்திரிகா தீவிரம்

கொழும்பு, நவ. 16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியை நிறுத்த வேண்டும் என்ற இயக்கத்துக்கு ஆதரவாக திருமதி சந்திரிகா குமாரணதுங்க தீவிரமாகச் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமதி சந்திரிகா சுதந்திரக்கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளராக தற்போது இயங்கி வருகிறார்.

திருமதி சந்திரிகா லலித்துக்கு ஆதரவாக பகிரங்கமாகச் செயற்பட்டு வருவது சுதந்திரக் கட்சிக்குள் சிக்கலை ஏற்படுத்தியிருப்பதாகவும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன. (த-எ)

# 4 இலங்கைத் தமிழர்கள் வேதாரண்யத்தில் கைது

சென்னை, நவ. 16

வேதாரண்யம் கடற்கரையில் நான்கு இலங்கைத் தமிழர் இந்தியக் கடலோரக் காவல்படையினரால் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் தங்களது படகு மூழ்கிவிட்டதாகவும் நடுக்கடலில் தாங்கள் விட்டுவிடப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

இந்த நால்வரிடம் இருந்து டீசல் மற்றும் என்ஜின் ஒயில் ஆகியவற்றைப் பொலீஸார் கைப்பற்றினர். இவர்கள் அனைவரும் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர். (த-எ)

# மாவீரர் எழுச்சிவார நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நவ. 16

மாவீரர் வாரத்துக்கு முன்னோடியான மாவீரர் எழுச்சி வாரத்தையொட்டி சிரமதான பணிகள், கருத்தரங்குகள் என்பன குடாநாட்டின் பல இடங்களிலும் நேற்று ஆரம்பமாகின.

எழுச்சி வாரத்தின் இரண்டாம் நாளான இன்றும் கருத்தரங்குகளும் சிரமதானப் பணிகளும் கோட்டரீதியாக வட்டங்களைப் பிரிவுகளில் நடைபெறவுள்ளன. சிரமதான வேலைகளில் பொதுமக்கள், பொது ஸ்தாபனங்கள் உட்பட பல் வேறு துறைகளைச் சேர்ந்தோர் கலந்துகொள்வர்.

கருத்தரங்குகள் மாலை வேளையில் வெவ்வேறு நேரத்தில் நடைபெறும்.

### கருத்தரங்குகள்

மாவீரர் எழுச்சி வாரத்தின் இன்றைய இரண்டாம் நாள் கருத்தரங்குகள் உடுவில் வட்டத்தில் மத்தாவேளை ச. ச. நிலையத்திலும், சங்கானை வட்டத்தில் தொல்புரம் மத்திய ச. ச. நிலையத்திலும், நல்லூரில் மூத்த விநாயகர் ச. ச. நிலையத்திலும், கோப்பாயில் கரும்பராய் ஞானவைரவர் ச. ச. நிலையத்திலும் —

சரவெட்டி வட்டத்தில் ஆசுவேலி மகா வித்தியாலயத்திலும், வைதடி வட்டத்தில் குமார நகர் ச. ச. நிலையத்திலும், கொடிகாமம் வட்டத்தில் கிளாலி கிளா ச. ச. நிலையத்திலும் —

பளை வட்டத்தில் கேசவன், தமிழ்செல்வன், அப்பன் ஞானகார்த்த பாலர் பாடசாலையிலும், [illegible] மட்டுவில் கிழ[illegible] தாஸ் ச. ச. [illegible] இன்றைய கருத்தரங்கு நடைபெறும்.

தீவகக் கோட்டத்துக்குரிய மாவீரர் எழுச்சி வாரக் கருத்தரங்கு வேற்பெலி பண்டிதர் குடியிருப்பு வட்டத்தில் வைநிதா குடியிருப்பில் நடைபெறும்.

மாணவர் அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு மருதனார்மடக் கல்விக் கோட்டத்தில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கடற்புலிகள் நடத்தும் எழுச்சிக் கருத்தரங்குகள் இன்று பின்வரும் இடங்களில் நடைபெறும்.

★ தாளையடி வட்டத்தில் — தாளையடி றோ. க. த. பாடசாலையில் —

★ வடமராட்சி வடக்கில் — ஆதிகோவிலடி ச. ச. நிலையத்திலும் — வல்வெட்டித்துறைச் சந்தி ச. ச. நிலையத்திலும்—

★ வலிகாமம் கிழக்கில் — கல்யாண மண்டபம், ஈச்சமோட்டை ச. ச. நிலையம், சுண்டிக்குளி ச. ச. நிலையம் —

### இன்றைய சிரமதானங்கள்

★ நாவற்குழி வைநிதா குடியிருப்பில் முகாம் சுத்திகரிப்பு.

★ வடமராட்சிகோட்டத்தில் மூத்தவிநாயகர் கோவிலடி, சலீம் வீதி, சிரமதானம்;

★ சங்கானையில், தொல்புரம் வடக்கம்பரை வீதியில் சிரமதானம்;

★ கோப்பாய் வட்டத்தில் ஆவரங்கால் சந்தையடி வாய்க்காலை சிரமதானம்.

★ உடுவில் வட்டத்தில் புன்னாலைக்கட்டுவன் தெற்கு வைத்தியசாலையிலும், மருதனார்மட உள்வீதியிலும் சிரமதானப் பணி.

★ கடற்புலிகளின் ஆதரவில் இன்று வலிகாமம் கிழக்கு வட்டத்தில் நாவலடி சந்தி, பூம்புகார் வீதி என்பன செப்பனிடப்படும்; வடமராட்சி கிழக்கில் உடுத்துறை மகா வித்தியாலய சுற்றாடல், செம்பியன்பற்றிலுள்ள வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா சுற்றாடல் பகுதிகளில் துப்புரவுப் பணியும், மரம் நடுகையும் இடம்பெறும்.

### கலைநிகழ்ச்சிகள்

பாடசாலைகள், தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடத்தும் மாவீரர் எழுச்சி வார நினை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாள் - 1992

**மாவீரர்களே!**

உங்களைப் புதைத்தமண் உறங்காது
உரிமைகள் பெறும்வரை கலங்காது
எங்களின் தாயகம் விடிவுபெறும் - புலி
ஏறிய கொடியுடன் ஆட்சி வரும்!

- தமிழீழ மாவீரர் பணியகம்.

## தமிழீழ மீட்பு நிதி மீளப் பெறுவோர் இலக்கம்

யாழ்ப்பாணம், நவ 16

மாவீரர் தினத்தை ஒட்டி தமிழீழ மீட்பு நிதி செலுத்தியோரில் ஆயிரம் பேருக்கு கடன் மீளளிப்புச் செய்யப்பட உள்ளது:

கடனை மீளப்பெறுவோரின் கடன் பத்திர இலக்கங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடன் மீளளிக்கப்படவுள்ள கடன் பத்திர இலக்கங்கள் நேற்றைய உதயனில் வெளிவந்தன.

யாழ்ப்பாணம், வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், காரைநகர்ப் பகுதியிலும் கடனை மீளப் பெற உள்ளோரின் கடன் பத்திர இலக்கங்கள் வருமாறு;-

### யாழ்ப்பாணம்

| | | | |
|---|---|---|---|
| மாசி — 1992 | | | |
| யா/யா/ | 106 | 994 | 1308 |
| | 1346 | 1590 | 2389 |
| | 4062 | 4603 | 4612 |
| பங்குனி — 1992 | | | |
| யா/யா/ | 75 | 92 | 97 |
| | 143 | 941 | 1349 |
| | 2165 | 2604 | 4986 |
| சித்திரை — 1992 | | | |
| யா/யா/ | 487 | 563 | 643 |
| | 702 | 1133 | 1690 |
| | 2812 | 4072 | 4221 |
| வைகாசி — 1992 | | | |
| யா/யா/ | 87 | 123 | 392 |
| | 818 | 837 | 931 |
| | 1487 | 3123 | 4163 |
| ஆனி — 1992 | | | |
| யா/யா/ | 554 | 593 | 618 |
| | 951 | 1984 | 2321 |
| | 3142 | 4126 | 4695 |
| ஆடி — 1992 | | | |
| யா/யா/ | 21 | 45 | 193 |
| | 631 | 1279 | 2178 |
| | 3317 | 3598 | 3724 |
| ஆவணி — 1992 | | | |
| யா/யா/ | 366 | 416 | 534 |
| | 832 | 957 | 1329 |
| | 3222 | 4841 | 4988 |
| புரட்டாதி — 1992 | | | |
| யா/யா/ | 23 | 93 | 108 |
| | 159 | 397 | 657 |
| | 1435 | 2548 | 2760 |
| | 3202 | | |
| ஐப்பசி — 1992 | | | |
| யா/யா/ | 55 | 58 | 256 |
| | 731 | 965 | 1445 |
| | 2188 | 2975 | 3816 |
| | 4485 | | |
| கார்த்திகை — 1992 | | | |
| யா/யா/ | 73 | 84 | 495 |
| | 524 | 600 | 738 |
| | 834 | 853 | 859 |
| | 3529 | | |

### வேலணை

| | | | |
|---|---|---|---|
| மாசி — 1992 | | | |
| யா/வே/ | 318 | 415 | 419 |
| | 726 | 2292 | 2711 |
| பங்குனி — 1992 | | | |
| யா/வே/ | 173 | 202 | 316 |
| | 381 | 1543 | 2618 |
| சித்திரை — 1992 | | | |
| யா/வே/ | 175 | 347 | 691 |
| | 698 | 713 | 2343 |
| வைகாசி — 1992 | | | |
| யா/வே/ | 299 | 372 | 717 |
| | 783 | 970 | 991 |
| ஆனி — 1992 | | | |
| யா/வே | 28 | 252 | 311 |
| | 1023 | 1718 | 2630 |
| ஆடி — 1992 | | | |
| யா/வே | 124 | 593 | 743 |
| | 949 | 1467 | 1712 |
| ஆவணி — 1992 | | | |
| யா/வே/ | 75 | 118 | 438 |
| | 891 | 2270 | 2798 |
| புரட்டாதி — 1992 | | | |
| யா/வே/ | 143 | 538 | 721 |
| | 786 | 872 | |
| ஐப்பசி — 1992 | | | |
| யா/வே/ | 142 | 617 | 742 |
| | 762 | 917 | |
| கார்த்திகை — 1992 | | | |
| யா/வே/ | 355 | 512 | 681 |
| | 1011 | 1902 | |

### காரைநகர்

| | | |
|---|---|---|
| மாசி — 1992 | | |
| யா/கா/ | 316 | 733 |
| பங்குனி — 1992 | | |
| யா/கா/ | 423 | 805 |
| சித்திரை — 1992 | | |
| யா/கா/ | 528 | 746 |
| வைகாசி — 1992 | | |
| யா/கா/ | 106 | 147 |
| ஆனி — 1992 | | |
| யா/கா/ | 834 | 903 |
| ஆடி — 1992 | | |
| யா/கா/ | 97 | 983 |
| ஆவணி — 1992 | | |
| யா/கா/ | 52 | 756 |
| புரட்டாதி — 1992 | | |
| யா/கா/ | 34 | 540 |
| ஐப்பசி — 1992 | | |
| யா/கா/ | 758 | 759 |
| கார்த்திகை — 1992 | | |
| யா/கா/ | 59 | 83 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கியாளர் பரீட்சை; வினாத்தாள் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், நவ 16

எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகும் இலங்கை வங்கி யாளர் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று விமான மூலம் எடுத்து வரப் பட்டன.

பலாலிக்கு எடுத்து வரப் பட்ட வினாத்தாள்கள் "குமாரி" கப்பல் மூலமாக நேற்றுக் காலை யாழ்ப்பாணத் துறைக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் இந் தப் பரீட்சையை நடத்துவதற் கான ஏற்பாடுகளை யாழ். கல்வித் திணைக்களம் மேற் கொண்டு வருகிறது.

---

## சகல பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கும்

# விசேட பொதுக் கூட்டம்

**09 — 12 — 1992**

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 09 - 12 - 1992 ஆம் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சங்க தற்காலிக பணிமனையில் (பி எஸ். சேவிஸ் நிலையம். யாழ்ப்பாணம்) சங்கத் தலைவர் திரு தி சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப் பெறும் தவறாது கூட்டத்திற்கு சமுகமளித்து ஒத்து ழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின் றோம்.

செயலாளர்

**ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்.**

முக்கிய குறிப்பு:

கூட்ட நிகழ்ச்சி நிரல் கிடைக்கப்பெறாதோர் தங்கள் கிளையிலோ அல்லது தலைமைக்காரி யாலயத்தில் செயலாளருடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

[இ-8856]

---

# மரண அறிவித்தல்கள்

## பெரியதம்பி மயில்வாகனம்

சங்கரத்தையைச்சேர்ந்த காலஞ்சென்ற பெரிய தம்பி ஒவசியரினதும் நேசமணியினதும் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா ஓவசியரின் பெறாமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், ந. பொன் னம்பலம் (U. K ), ந. விவேகானந்தன் (U. K ), திருமதி ந. மகேசன் (U. K ), திருமதி ர. மகேந்திர ராஜா (U. K ), ந. விபுலானந்தன் (சாந்தி, புத்தளம்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமான பெரியதம்பி மயில்வாகனம் 03-11-92 அன்று லண்டனில் காலமா னார்.

சின்னப்பு இல்லம்,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

தகவல்:
கனகம்
(சிறிய தாயார்)
[சி/3857]

## மு. க. க. அருட்பிரகாசம்

(கந்தையா மாஸ்டர்)

பண்டிதர் மு. க. க. அருட்பிரகாசம் (கந்தையா மாஸ்டர்) இளைப்பாறிய அதிபர், (O. L. R.) கால மாகி விட்டார்.

இவர் அன்னம் பொன்னம்மாவின் அன்புக் கண வரும், பேரின்பநாயகி, பேரின்பராணி, உருத்திரன் (இலிகிதர், சமநல சேவைகள் திணைக்களம் நல்லூர்), பேரின்பமாலினி, பேரின்பராஜா, (நோர்வே), பேரின்பராஜினி (நோர்வே), பேரின்பவதனி ஆகி யோரின் அன்புத் தந்தையும், க. சின்னத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்), மு. உருத்திரன் ஆகியோ ரின் அன்பு மாமனாரும், வேலுப்பிள்ளை வரப்பிரகா சம் (இளைப்பாறிய ஊழியர், புனிதவனன் கந். அச் சகம்) அவர்களின் அன்புச் சகோதரரும், சுதர்சன் (பரியோவான் கல்லூரி), யூட் துஸ்யந்தன் (பரியோ வான் கல்லூரி), சுரேசினி, றோஜினி, சித்துஜா, ஜோர்ஜினி, விக்னா ஆகியோரின் அன்புப் பாட்டனா ரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக, அவ ரது இல்லத்தில் இருந்து இன்று திங்கட்கிழமை (16 - 11 - 92) மாலை 3 30 மணிக்கு புனித சொஞ் செஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

எமிலகம்,
வளன்புரம்,
கொழும்புத்துறை.

தகவல்:
க. சின்னத்துரை
(ஆசிரியர்)
(மருமகன்)
[23285]

## தம்பிராசா மகேந்திரலிங்கம்

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த தம்பிராசா மகேந் திரலிங்கம் சென்ற 13-11-92 அன்று சுவிஸில் அகால மரணமானார்.

இவர் ஓய்வு பெற்ற காணி அபிவிருத்தி திணைக் கள கட்டட மேற்பார்வையாளர் திரு தம்பிராசா - திருமதி தங்கம்மா ஆகியோரின் அன்பு மகனும், திருமதி வனிதராணி, திரு. பஞ்சலிங்கம் (நாவலப் பிட்டி), திரு. தியாகலிங்கம் (ஜேர்மனி), காலஞ் சென்ற யோகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதர ரும், திரு. சுவாமிநாதன், திருமதி ப. ரஞ்சனி, திருமதி தி இல்லியா (ஜேர்மனி) ஆகியோரின் மைத் துனரும், லாசன் யாமினி ஆகியோரின் மாமனா ரும், நிமேஷ்ஷின் சிறிய தந்தையும் ஆவார்.

உற்றார், உறவினர் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

"பிறந்தாலயம்"
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி

தகவல்;
செ. தம்பிராசா
(தந்தையார்)

[23232]

---

# இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ். மிட்ரவுண் றோட்டறக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து சென். றோசிஸ் அணி மோதும். (க)

# முன்னாள் எம். எல். ஏ. சுட்டுக் கொலை

சென்னை, நவ. 16

பாண்டிச்சேரி சட்டசபை யின் திரு மு. க. முன்னாள் எம். எல். ஏயான முனிராஜன் என்பவர் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் சுட் டுக் கொல்லப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து பாண்டிச்சேரியில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

---

## போர் நிறுத்தத்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும்—

அதனடிப்படையிலேயே சமாதான முயற்சி ஒன்றை மேற்கொண்டு அவர்கள் அண் மையில் யாழ்ப்பாணம் வந்த வர் என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

"குவாக்கர்" குழுவினர் விடுதலைப் புலிகளுக்கும் அர சுப் படைகளுக்கும் இடையே போர் நிறுத்தம் ஒன்றை ஏற் படுத்தும் முயற்சியில் ஈடுபட் டனர் என்றும்—

போர் நிறுத்தம் கொண்டு வருவதற்கான விதிமுறைகள் குறித்து இணக்கம் ஏற்படாத தால் போர்நிறுத்த முயற்சி தடைப்பட்டது என்றும்—

அரச சார்புப் பத்திரிகை யான "சண்டே ஒப்சேவர்" தெரிவித்தது.

தமிழர்களுக்கென ஒரு பிர தேசத்தை — வடக்கு, கிழக்கு இணைந்த நிலையில் — தரும் திட்டம் ஒன்று வருமானால் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு அந்தத் திட்டத் தைப் பரிசீலனை செய்யத் தாம் தயார் என்று குவாக் கர் குழுவினரிடம் விடுதலைப் புலிகள் கூறியதாகவும் அந் தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந் தது.

இதற்கிடையில், அரசு சார்பு தமிழ் வார இதழான "தினகரன்" — "குவாக்கர் குழு - விடுதலைப் புலிகள் சந்திப்பு; சமாதான முயற்சி குறித்து விடுதலைப் புலிகளு டன் மற்றொரு சுற்றுப் பேச்சு நடைபெறலாம்; அமைச்சர் ஹமீத்தின் அறி விப்பை அடுத்து முடிவு" — என்ற தலைப்புகளில் செய்தி வெளியிட்டிருக்கிறது.

(உ-எ-3)

---

## ஆர்ஜென்ரீனா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா அரச திட்டமிட் டுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் தயா ரிக்கப்பட்ட போர் ஹெலிக் கொப்டர்களை ஸ்ரீலங்கா அரசு வாங்கி விட்டால் தற் போது ஸ்ரீலங்கா விமானப் படை பயன் படுத்தி வரும் இத்தாலி தயாரிப்பான சியா மாசெட்டி ரக போர் விமா னங்கள் மாற்றப்பட்டு விடும் என்றும் கருதப்படுகின்றது.

இதேவேளை —

பிரான்ஸின் தொழில் நுட்ப உதவியுடன் — 36 கோடி ரூபா செலவில் — ஸ்ரீலங்கா அரசு நான்கு அதிவேக பீரங் கிப் படகுகளை அமைக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படு கிறது

இது சம்பந்தமான தொழில் நுட்ப அறிவைப் பெறுவதற் காக ஸ்ரீலங்கா பொறியிய லாளர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும் அடுத்த வார மளவில் பிரான்ஸ் செல்ல விருப்பதாக ஏஜென்ஸிச் செய் திகள் மேலும் தெரிவித்தன.

(உ-எ-3)

---

## அதிபர்கள்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ மருதனார்மடம் கல்விக் கோட்டம்: 18ஆம் திகதி புதன் பிற்பகல் 2-30 மணிக்கு — இராமநாதன் கல்லூரி மண்டபம்.

★ தென்மராட்சிக் கல்விக் கோட்டம்: 18ஆம் திகதி [illegible] 10 மணிக்கு சாவகச்சேரி [illegible] லூரி மண்டபம். (ஓ)

---

## நான்கு மாவட்டங்களின்

# வெள்ளநிவாரணத்துக்கு ரூபா 17 கோடி ஒதுக்கீடு!

கொழும்பு, நவ. 16

சூறாவளி மற்றும் வெள்ளத் தினால் பாதிக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில் நிவாரணப் பணிகளை மேற் கொள்வதற்காக சமூக சேவைத் திணைக்களம் 17 கோடி ரூபாவை ஒதுக்கி யுள்ளது.

### இரத்தினபுரி

இரத்தினபுரியில் வெள்ளத் தினால் 10 ஆயிரத்து 600 குடும்பங்கள் பாதிக்கப்பட் டன; நிவாரணப் பணிகளுக் கென இம்மாவட்டத்துக்கு ஒரு கோடி 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

### அம்பாறை

இம்மாவட்டத்தில் 2 ஆயி ரத்து 500 வீடுகள் சேதமடைந் தன 4 ஆயிரம் ஏக்கர் நெற் பயிர்களும் 2 ஆயிரம் ஏக்கர் கலப்புப் பயிர்ச் செய்கையும் சேதமடைந்தன. இம்மாவட் டத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 4 கோடி 10 லட் சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

### பதுளை

இம்மாவட்டத்தில் 592 குடும்பங்கள் பாதிக்கப்பட் டன. 62 குடும்பங்கள் முகாம் களில் அகதிகளாகத் தங்கி யுள்ளன; இம்மாவட்டத்தில் நிவாரண வேலைகளை மேற் கொள்ள 9 கோடி 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு உள்ளது.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத் தில் நிவாரண வேலைகளை மேற்கொள்ள 2 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத் தில் மட்டும் சூறாவளி, வெள் ளத்தால் பத்தாயிரம் குடும் பங்கள் வரையில் பாதிக்கப் பட்டுள்ளன.

அடை மழை மற்றும் காற்று காரணமாக களுத்துறையில் 340 குடும்பங்களும் புத்தளத் தில் 140 குடும்பங்களும் கொழும்பில் 600 குடும்பங் களும் பாதிக்கப்பட்டன.

---

## இ. த. ஆ. ச. செயலர் இடமாற்றம்:

# மறுபரிசீலனை செய்வதற்கு பதில்கள் வரவேண்டுமாம்

யாழ்ப்பாணம், நவ. 16

இலங்கைத் தமிழர் ஆசிரி யர் சங்கத்தின் பொதுச் செய லாளர் திரு. த. மகாசிவத் தின் இடமாற்றம் தொடர் பாக மாகாண, மத்திய கல் வியமைச்சு செயலாளர்களுக்கு ஏற்கனவே விளக்கக் கடிதம் அனுப்பியுள்ளேன்: அவற்றுக் குரிய பதில் கிடைத்த பின்பே இவரின் இடமாற்றம் தொடர் பாக மறுபரிசீலனை செய்ய லாம்;

யாழ். மாவட்டத்தின் தள நிலமையைக் கருத்தில் கொண்டு செயற்படுவேன்.

—இப்படிக் கூறினார் யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பா ளர் திரு. இ. சுந்தரலிங்கம்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலா ளர் திரு. த. மகாசிவம் யாழ். சன்மார்க்க வித்தியா சாலைக்கு அதிபராக இட மாற்றம் செய்யப்பட்டதும்—

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனவிரத்தி னாவுக்கு அவர் அப்பீல் செய் ததும் —

இடமாற்ற உத்தரவை ரத் துச் செய்யுமாறு வடக்கு - கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சு செயலாளர் பிராந் திய பணிப்பாளருக்கு அறிவித் ததும் — தெரிந்தவையே.

இந்த விவகாரம் குறித்து கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் அனுப்பியதாகக் கூறப்படும் கடிதம் இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை; இது போன்று மற்றும் பலர தும் இடமாற்றங்கள் ரத்துக் குறித்து மாகாணக் கல்வி அமைச்சிடம் இருந்து ஏற்க னவே கடிதங்கள் கிடைத்தன.

இங்குள்ள தள நிலைமை பற்றி அவர்களுக்குச் சரியான தகவல்கள் கிடைப்பதில்லை. இங்குள்ள தளநிலைமைக் கருத்தில் கொண்டு முடிவு செய்து அந்த விபரங்களை மாகாண, மத்திய கல்வி அமைச்சு செயலாளர்களுக்கு அறிவிப்பேன்;

ஏற்கனவே இவரது இட மாற்றத்துக்கான காரணங் களை விளக்கி மாகாண, மத் திய கல்வி அமைச்சுகளின் செயலாளர்களுக்கு அனுப்பிய கடிதங்களுக்குப் பதில் கிடைத்த பின்னர் இடமாற் றம் குறித்து மறுபரிசீலனை செய்யலாம் — என்றார்.

(அ-3)

---

## நேற்றும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் ஒரு குழந்தை மரண மானது

மயிலிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து மருதனார் மடம் ஆச்சிரமம் அகதி முகாமில் தங்கியிருந்த சுந்தரலிங்கம் சசி (வயது 1½) என்ற பெண் குழந்தையே மரணமானது.

கடந்த 15 நாட்களில் மட்டும் —யாழ் ஆஸ்பத்திரியில் (பதி வேட்டின்படி) — 15 குழந்தை கள் வயிற்றோட்டத்தினால் இறந்துள்ளனர்.

(ஓ-15)

---

## மாவீரர்...

(3 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வும் கூட்டமும், கலைநிகழ்ச்சி களும் இன்று பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி யில் நடைபெறும்.

(த-5)

---

## மனித சங்கிலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பியுடன் இணைந்து மக்கள் மத்தியில் விஷமப் பிரசாரம் செய்யும் அரசின் நடவடிக் கையே இது என எதிர்க்கட்சி கள் தரப்பில் கூறப்பட்டது;

மனித சங்கிலிப் போராட் டத்தின்போது கடும் மழைக்கு மத்தியிலும் பெருந்திரளா னோர் பங்கு பற்றினர் என் றும்—

அரசுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தால் அதற்கு மக்கள் ஆதரவு வழங் குவர் என்பதையே இது காட்டுகிறது என்றும் செய்தி யாளர் ஒருவர் சுட்டிக்காட்டி னார்;

(உ-3-6)

---

## எழுச்சிவார...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தந்த வட்டங்களில் திட்டமிட்டவாறு கிரமமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன; அவற்றில் பெரும் எண்ணிக் கையான பொதுமக்களும், இளைஞர்களும், மகளிரும் முகாம்களில் தங்கியிருப் போரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டதாக எமது செய்தியாளர்கள் அறிவிக் கிறார்கள்.

பல இடங்களில் பொது நிறு வனங்களின் ஆதரவில் மரம் நடுகையும் இடம்பெற்றது. மாலையில் கருத்தரங்குகளும் பரவலாக வட்ட ரீதியில் நடைபெற்றன.

இதேவேளை மாவீரர் வாரத்துக்குரிய பந்தல்களை யும் அலங்கார வளைவுகளை யும் அமைப்பதிலும் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வரு கின்றனர்;

(அ-117-18-162-15)

---

**காட்டை அழிக்க நாடழியும்**
**களனி செல்வமும் தான் ஒடுங்கும்**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்லிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக் கத்தில் உள்ள அச்சகத்தில் 16-11-92 இல் அச்சிட்டு வெளி யிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org